# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.I, Mettur

## Case No : C. C. 135/2014

**Prosecution witness : எ.ம.சா. 1 Date : 19.06.2024**

| | |
|---|---|
| **Name: கோசலை** | **Taluk : மேட்டூர்** |
| **Father Name : மாரியப்பன்** | **Calling : கூலி** |
| **Village : கொளத்தூர்** | **Age : 65** |

**(Petitioners and A1 to A4, A5, A7 present. A6 absent. Filed Petition and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். நான் எப்போதும் கையெழுத்து தமிழில் செய்வேனா அல்லது ஆங்கிலத்தில் செய்வேனா என்றால் இரண்டிலும் கையெழுத்து செய்வேன். எங்களது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களின் பட்டா விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் எனக்கு தெரியாது. என் அண்ணன்களுக்கு தான் தெரியும். என் அம்மாவின் காட்டிற்கு வடக்குபுறம் உள்ள பரமசிவத்தின் காட்டின் விஸ்தீரணம் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. அந்த நிலத்தை பரமசிவத்தின் குடும்பத்தார் என்ன செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். உயிலில் சொல்லப்பட்ட சொத்தானது பட்டா மூலம் என் அம்மாவிற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். பட்டா மூலம் பாத்தியப்பட்ட சொத்தை தான் என் அம்மா எனக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்று வழக்காடுகிறேன் என்றால் சரிதான். நான் யார் யாருக்கு இடத்தை விற்றேன் என்றால் பொன்னுசாமி, நல்லதம்பி, சசிகுமார் ஆகியோர் விற்றேன். நிலத்தை விற்பதற்கு முன்பு ஏதாவது கிரய ஒப்பந்தம்

ஏற்படுத்திக்கொண்டேனா என்றால் பணம் கொடுத்துள்ளதை மட்டும் தான் போட்டுள்ளேன். ஒப்பந்தமாக போட்டுள்ளேனா என்றால் போட்டார்கள். அதில் என்ன உள்ளது என்று எனக்கு தெரியாது. தற்போது வரை அந்த ஒப்பந்த பத்திரத்தில் என்ன உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த ஒப்பந்த பத்திரம் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதா என்றால் பதிவு செய்யப்பட்டது. பத்திரத்தை கொடுத்தேன் பதிவு செய்திருந்தார்கள். ஒப்பந்த பத்திரம் கடந்த 1 அல்லது 2 ஆண்டுகளுக்கு போடப்பட்டதா என்றால் இல்லை. 2011–ம் ஆண்டே போடப்பட்டது. என்ன தேதி மாதம் எனக்கு தெரியாது. அந்த ஒப்பந்த பத்திரத்தை பொன்னுசாமி, நல்லதம்பி, சசிகுமார் பேருக்கு தான் போட்டுக்கொடுத்தேனா என்றால் ஆமாம். அவர்களே எழுதிக்கொண்டார்கள். கையெழுத்து போடச் சொன்னார்கள் கையெழுத்து மட்டும் போட்டேன். அந்த ஒப்பந்த பத்திரத்தில் நான் கையெழுத்து எங்கு வைத்து போட்டேன் என்றால் பதிவு அலுவலகத்தில் வைத்து போட்டேன். நானும், பொன்னுசாமி, நல்லதம்பி, சசிகுமார் ஆகியோர் தான் கையெழுத்து செய்தோமா என்றால் ஆமாம். மேற்கண்ட எங்கள் 4 பேரை தவிர வேறு யாரும் கையெழுத்து செய்யவில்லை. நாங்கள் போட்ட ஒப்பந்த பத்திரத்திலிருந்து எவ்வளவு நாளுக்குள் கிரயம் செய்துக்கொடுத்தேன் என்றால் 6 மாதம் இருக்கும். அந்த ஒப்பந்த பத்திரத்தில் ஒரு செண்ட் நிலம் ரூ.19,800/– என்று சொன்னால் தவறு. ரூ.18,000/–க்கு தான் கொடுத்தேன். இந்த ஒப்பந்த பத்திரத்தில் உள்ள சங்கதிகள் அனைத்து தவறாக தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். தவறுதலாக எழுதியுள்ளதால் அந்த ஒப்பந்த பத்திரம் என்னை கட்டுப்படுத்தாது என்றால் சரிதான். நான் அந்த ஒப்பந்த பத்திரத்தை

படித்தும் பார்க்கவில்லை, யாரும் படித்தும் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் கேட்டதற்கு கையெழுத்து மட்டும் நான் போட்டேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ஆவணம் நாங்கள் எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான். மேற்படி கிரயப்பத்திரத்தில் நான்காவது பக்கத்தில் "இப்பவும் இதன் அடியில் சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்டுள்ள சொத்தானது எங்களில் 1–ம் லக்கமிட்டவருக்கு கொளத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 3–ம் புத்தகம் 2001–ம் ஆண்டின் பத்தாம் எண்ணாக பதிவு செய்யப்பட்டுள்ள மதிப்பு காணாத உயில் சாசன ஆவணத்தின் படி பாத்தியப்பட்டது" என்று கண்டுள்ளது என்றால் சரிதான். கிரயம் செய்துக்கொடுக்கும் வரை அந்த நிலத்தில் யார் சுவாதீனம் செய்து விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் நான் தான் செய்து வந்தேன். தற்போது வழக்கு நடைபெறுவதால் இந்த உயிலில் உள்ள சொத்தில் விவசாயம் செய்யாமல் குறையாக உள்ளது என்றால் சரிதான். கிரய ஆவணம் எழுதுவதற்கு முன்பே உயில் ஆவணத்தை பொன்னுசாமி, நல்லதம்பி, சசிகுமார் ஆகியோரிடம் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். வ.சா.ஆ.10–னுடன் இணைக்கப்பட்டுள்ள உயிலின் அசலை தான் அவர்களிடம் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த அசல் உயில் ஆவணத்தை நான் படித்துப் பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். அசல் உயிலை 5 முதல் 7 வரையிலான எதிரிகள் பொன்னுசாமி வகையாறிடம் கொடுக்கும் போது எந்த ஒரு அடித்தல் திருத்தல் இல்லாமல் தான் கொடுத்தேன் என்றால் சரிதான். உயிலில் உள்ள 2–வது அயிட்ட சொத்திற்கும், பட்டாவிற்கும் நிறைய வேறுபாடுகள் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அசல் உயிலுக்கும், பட்டாவிற்கும், சர்வே எண், விஸ்தீரணம் ஆகியவை வேறுபாடாக

இருந்தது என்றும் பட்டாவில் உள்ளது போல் 5 முதல் 7 வரையிலான எதிரிகளின் தூண்டுதலின் பேரில் நாங்கள் அசல் உயிலை திருத்தம் செய்தோம் என்றால் சரியல்ல. அசல் உயிலை வாங்கி தான் OS.219/2013 என்ற வழக்கை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மேட்டுரில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். தற்போது வரை அந்த வழக்கு நிலுவையில் தான் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் சேர்ந்து தான் அசல் உயிலை திருத்தம் செய்தோம் என்றால் இல்லை. 5 முதல் 7 வரையிலான எதிரிகள் தான் திருத்தினார்கள். நான் உயிலையே பார்க்கவில்லை. இன்று வரை அந்த அசல் உயிலை நான் பார்க்கவில்லை. 5 முதல் 7 வரையிலான எதிரிகள் தான் உயிலை திருத்தினார்கள் என்று அவர்கள் மீது ஏதாவது வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் உயிலை திருத்திய விவரமே எனக்கு தெரியாது. எல்லா விவரங்கள் எனக்கு தெரியும் என்றும், இந்த வழக்கிற்காக முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் அம்மாவிற்கு மொத்தம் எத்தனை ஏக்கர் நிலம் பாத்தியப்பட்டது என்று சொல்கிறேன் என்றால் 1 ஏக்கர் 39 செண்ட். என் அம்மாவிற்கு பாத்தியப்பட்ட முழு சொத்தையும் எனக்கு உயில் எழுதிக்கொடுத்தார் என்று சொல்கிறேன் என்றால் ஆமாம். ஆனால் 99 செண்ட் தான் எனக்கு கிடைத்தது. மீதமுள்ள சொத்தை கணேச முதலியாருக்கு அப்பு விற்றுவிட்டார். இந்த விவரத்தை நான் தாக்கல் செய்துள்ள சிவில் வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என் அம்மாவிற்கு உயிலில் சொல்லியுள்ளது போல் 99 செண்ட் தான் பாத்தியப்பட்டது என்றும், நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த சொத்தை வாங்குவதற்கு முன்பு

அவர்கள் வில்லங்கம் போட்டு பார்த்தார்களா அல்லது அளந்து பார்த்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் வில்லங்கம் போட்டு பார்த்தார்கள். அந்த ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கிரய ஆவணத்தில் எவ்வளவு தொகை போட்டு கிரயம் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள் என்று சொல்லியுள்ள நிலையில் யார் யாருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு வந்தது என்றால் எனக்கு மட்டும் தான் வந்தது. அதில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். அதற்கு என் வழக்கறிஞர் மூலமாக நான் பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. என் அண்ணன் அப்புவுடன் சுமார் 40 வருடங்களாக நான் பேச்சுவார்த்தையில் இல்லை என்றால் சரிதான். என் அண்ணன் குடும்பத்துடன் நானோ, என் குடும்பத்தாரோ பேச்சுவார்த்தையும் இல்லை என்றும், எந்த நல்லது கெட்டதுக்கு போக மாட்டோம் என்றும், வரவு செலவு இல்லை என்றால் சரிதான். அதே போல் மற்ற இரண்டு அண்ணன்கள் வெங்கடாஜலம், நடேசன் என்பவர்களின் குடும்பத்தாருடனும் சுமூகமான பேச்சு வார்த்தையில்லை என்றால் சரிதான். அப்பு இறந்த பிறகும் அவரின் மனைவி மற்றும் மகனிடம் சுமூகமான உறவு இல்லை என்றால் சரிதான். நான் அப்பு, வெங்கடாஜலம் மற்றும் நடேசன் குடும்பத்தார் மீது உயிலில் கண்டுள்ள 1–வது அயிட்ட சொத்தினை குறித்து மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மேட்டூரில் OS.219/2013 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். O.S.No.240/2013 என்ற வழக்கை நான் அப்பு, வெங்கடாஜலம் மற்றும் நடேசன் குடும்பத்தார் மீது பாகம் கேட்டு தாக்கல் செய்து வழக்கானது முழுவிசாரணைக்கு பிறகு தள்ளுபடி

செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே போல் அப்பு வகையறா உயிலில் கண்ட சொத்துக்களை பாகம் பிரித்து தர சொல்லி கேட்டும், உயில் செல்லாது என்று பரிகாரம் கேட்டும், எங்கள் மீதும், 5 முதல் 7 வரையிலான எதிரிகள் மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். கூட்டுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தினை ஏமாற்றும் நோக்கத்துடன் நான், மற்றும் 2 முதல் 7 வரையிலான எதிரிகள் அனைவரும் சேர்ந்து உயிலில் திருத்தம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்றால் சரியல்ல. பொன்னுசாமி, நல்லதம்பி மற்றும் சசிகுமார் வசதி படைத்தவர்கள் மற்றும் அரசியல் செல்வாக்கு உடையவர்கள் என்றால் சரிதான். 5 முதல் 7 வரையிலான எதிரிகள் வசதியுள்ளவர்கள் என்பதாலும், அரசியல் செல்வாக்கு உடையவர்கள் என்பதாலும் நாங்கள் உயிலை திருத்தம் செய்துக்கொள்ளலாம் அதன் பின் பார்த்துக்கொள்ளலாம் என்று சொன்னார்களா என்றால் இல்லை. சொத்தை எல்லாம் ஏமாற்றி வாங்கிவிட்டு வழக்கு வந்தவுடன் எங்கள் குடும்பத்தை மட்டும் வழக்கில் மாட்டிவிட பார்க்கிறார்கள் என்றால் சரிதான். 1 முதல் 4 வரையிலான எதிரிகள் 5 முதல் 7 வரையிலான எதிரிகளை வழக்கில் சிக்கவைக்கவும், 5 முதல் 7 வரையிலான எதிரிகள், 1 முதல் 4 வரையிலான எதிரிகளை சிக்கவைக்கவும், மாற்றி மாற்றி வழக்காடுகிறீர்கள் என்றால் சரியல்ல. என் மகன், மகள்கள் பின்னிட்டு எந்த பிரச்சனைக்கு வரக்கூடாது என்பதால் அவர்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். அவர்களுக்கும், இந்த பிரச்சினைக்கும் சம்மந்தம் இல்லை. இன்று வரை நான் 2 முதல் 4 வரையிலான எதிரிகள் ஒரே வழக்கறிஞர்களை வைத்து தான் வழக்கு நடத்தி வருகிறோம் என்றால்

சரிதான். இந்த பிரச்சினையில் என் மகள்கள் மற்றும் மகன்கள் சம்மந்தம் இல்லை என்று சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 7 வரையிலான எதிரிகள் அனைவரும் கூட்டாக சதி செய்து, ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன், உயிலை திருத்தம் செய்த குற்றத்திற்காக தண்டிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**ஒம்/—அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**